**செய்தி வெளியீடு எண்: 785** **நாள்: 28.10.2018**

# வன்னியர் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் ஏற்புரை (28.10.2018)

சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின்
விடிவெள்ளியாக திகழும் மாண்புமிகு அம்மா
தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே !

தலைமையுரை ஆற்றிய அகில இந்திய வன்னியர் குல
க்ஷத்திரிய சங்கங்களின் பேரமைப்பின் தலைவர்
மருத்துவர் **எஸ்.எஸ்.ஆர்.ராமதாஸ்** அவர்களே !

வரவேற்புரை ஆற்றிய
தமிழ்நாடு சமூக ஆர்வலர்கள் பொதுநல அமைப்பின்
மாநிலத் தலைவர் திரு. **கோ.சூரியமூர்த்தி** அவர்களே !

இவ்விழாவிற்கு முன்னிலை வகிக்கின்ற

சென்னை வன்னிய குல க்ஷத்திரிய மகா சங்கத்தின்
தலைவர் திரு. **ஆர்.அன்பரசு** அவர்களே !

வடஆற்காடு மாவட்ட வன்னிய குல க்ஷத்திரிய சங்கத்தின்
தலைவர் திரு. **என்.முனிய கவுண்டர்** அவர்களே !

திரு. **பி.எஸ்.பழனி நாயகர்** அவர்களே !

வாழப்பாடியார் அறக்கட்டளையின் தலைவர்
வாழப்பாடி திரு. **ஆர்.இராமசுகந்தன்** அவர்களே !

இராமசாமி படையாட்சியார் வாழப்பாடியார் பேரவையின்
தலைவர் திரு. **சைதை வி.தேவதாஸ்** அவர்களே !

வன்னியர் க்ஷத்திரியர் சாம்ராஜ்ய இணைப் பொதுச் செயலாளர்
திரு. **கண்ணன் ஷத்திரியர்** அவர்களே !

பாராட்டுரை வழங்கிய

படையாட்சியார் பேரவையின் தலைவர்
திரு. **எம்.பி.காந்தி** அவர்களே !

அகில பாரத க்ஷத்திரிய மஹாசபையின்
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி தலைவர்
திரு. **ஜி.சந்தானம்** அவர்களே !

வன்னியர் மக்கள் சங்கத்தின் தலைவர்
திரு. **த.குபேந்திர குணபாலன்** அவர்களே !

வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர்
திரு. **சி.என்.ராமமூர்த்தி** அவர்களே !

சமூகநீதி க்ஷத்திரியர் பேரவையின் அமைப்புச் செயலாளர்
திரு. **எஸ்.எம்.குமார்** அவர்களே !

வன்னியர் வரலாற்று ஆய்வுப் பேரவையின் தலைவர்
திரு. **ஏ.சி.வெங்கடேச பல்லவன்** அவர்களே !

அகில இந்திய வன்னிய சேனா தலைவர்
டாக்டர் **வீரவன்னிய ராஜா** அவர்களே !

தமிழ்நாடு வன்னியர் கிறிஸ்தவர் சங்கத்தின் தலைவர்
திரு. **ஏ.ஜோசப்** அவர்களே !

திரு. **மு.ஜெயராமன்** அவர்களே !

சேலம் மாவட்ட வன்னியர் அறக்கட்டளையின் செயலாளர்
திரு. **இரா.வெ.முத்துசாமி** அவர்களே !

நன்றியுரை ஆற்றவுள்ள

சென்னை வன்னிய குல க்ஷத்திரிய மகா சங்கத்தின்
பொருளாளர் திரு. **ஆர்.ஆனந்த பாபு** அவர்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

இளைஞர்களே! மாணவ மாணவிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, திரு. ராமசாமி படையாச்சியார்

அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும்

என்று அறிவித்ததற்கும், அன்னாரின் திருவுருவச் சிலையுடன்

கூடிய ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் என்று அறிவித்ததற்கும்,
வன்னியர் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்படும் இந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்கள் செப்டம்பர் 16, 1918 ஆம் ஆண்டு பிறந்தார்.
இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு,
நம் நாடு சுதந்திரம் பெற அரும்பாடுபட்டவர்.
இவர் இந்தியா விடுதலை அடைந்த பின்பு 1952 ஆம் ஆண்டு தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி என்ற ஒரு கட்சியை உருவாக்கினார். இவர் தலைமையில் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் திரு. ராமசாமி படையாச்சியார் உட்பட 19 உழைப்பாளர் கட்சி வேட்பாளர்கள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
மக்களவைக்கான தேர்தலில் நான்கு இடங்களில் இக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

பின்னர் 1954ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக 1957 வரை பணியாற்றினார். பின்னர் 1980 மற்றும் 1984ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று, நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

முதன் முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவு தொடங்கப்பட்டு வன்னியர் சமூகத்திற்கு மாநிலத்தில் 20 சதவீத ஒதுக்கீடும், மத்தியில் 2 சதவீத ஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை உழைப்பாளர் கட்சி மாநாட்டில் நிறைவேற்றியவர் மறைந்த திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் தான் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் வெற்றிபெற மத்திய, மாநில அரசுகளிடம் இது பற்றி விரிவாக எடுத்துரைத்து வன்னியர்குல மக்களின் நலனுக்காக பாடுபட்டவர் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவரது பணியினை சிறப்பிக்கும் வகையில், தேசிய தலைவர்களில் ஒருவரும், தமிழ்நாட்டு மக்கள் நலனுக்காக பாடுபட்டவரும், பின்தங்கிய மக்களின் வாழ்க்கை

முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த இவரின் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று **29.6.2018** அன்று சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வன்னியர்குல சான்றோர் பெருமக்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் பெருமைக்கும், புகழுக்கும் சிறப்பு சேர்க்கும் விதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில், அரசு சார்பாக ஒரு நினைவு மண்டபமும், அந்த நினைவு மண்டபத்தில் அவருக்கு முழுஉருவ வெண்கலச் சிலையும் அமைக்கப்படும் என்று **19.7.2018** அன்று மேட்டூரில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் நான்அறிவித்தேன்.

அளித்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வாறு செயல்பட்டாரோ, அதே வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசும் செயல்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு **2** கோடியே **15** லட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் 69 ஏர்ஸ் அரசு நிலம் ஒதுக்கி நினைவு மண்டபம் அமைக்க, 24.8.2018 அன்று அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி அமைக்கப்பட உள்ள முழு உருவ சிலையுடன் கூடிய நினைவு மண்டத்திற்கு நான் 14.9.2018 அன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்த நினைவு மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டு மக்களின் பார்வைக்காக விரைவில் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டைய காலத்தில் நாட்டை ஆண்டது மற்றும் நாட்டை காக்கின்ற பணிகளை செய்த வன்னியர்கள், நாட்டின் சுதந்திரப் போரிலும் பெருமளவில் பங்கு கொண்டுள்ளனர்.

**கந்தவராயன்** மற்றும் **சந்தவராயன்** ஆகியோர் முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து சிறைக்குச் சென்றனர். சத்தியாகிரக முறையில் இவர்கள் சுதந்திரத்திற்காக போராடியவர்கள்.

தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகளை காப்பாற்றுவதற்காக குண்டடிபட்டு தனது இன்னுயிரை ஈந்தவர் **மயூரம் நாகப்ப படையாச்சி.** காந்தியடிகள் தமிழ்நாடு வந்த சமயம் அவரது குடும்பத்தை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதாக வரலாறு.

**சர்தார் ஆதிகேசவலு நாயக்கர்** தேச விடுதலைக்காக **11** ஆண்டுகள் சிறையில் இருந்தார். இவர் காந்தியடிகளிடம் சர்தார் பட்டம் பெற்றவர். மகாத்மா காந்தியின் வரிகொடா இயக்கத்தில் பங்கு கொண்டதால், சென்னையில் இருந்த தனது பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை ஆங்கிலேய அரசு கைப்பற்றிய போதும் தொடர்ந்து செயல்பட்டவர். மகாத்மா காந்தியடிகள், திலகர், பாரதியார் போன்ற பெருந்தலைவர்களை அழைத்து சென்னை மெரினா கடற்கரையில் சுதந்திரப் போராட்ட எழுச்சி மாநாடு நடத்தியவர்.

இவரைத் தவிர, **திரு. எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார், எம்.ஏ.மாணிக்கவேலு நாயக்கர், அஞ்சலை அம்மாள், தேவகி அம்மையார்** போன்ற ஏராளமானோர் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டனர்.

இவர்களில் **திரு. ராமசாமி படையாச்சியார் மற்றும்**

**மாணிக்கவேலு நாயக்கர்** சுதந்திர இந்தியாவில் தமிழ்நாடு அமைச்சரவையில் பங்கேற்று தமிழ்நாட்டின் நலனுக்காக பெரும் பணியாற்றினர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர், சமூக நிலையில் உயர்வடைய பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

❖ 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தினார். அது முதல் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இடஒதுக்கீடு உட்பட 69 விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது.

❖ தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள், 1993 ஆம் ஆண்டு சட்டம் இயற்றி அதனை அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து,

அரசமைப்பு பாதுகாப்பு பெற்றுத் தந்தார்கள். அது மட்டுமல்ல, இட ஒதுக்கீட்டுக்கு எப்போதெல்லாம் ஆபத்து வருகிறதோ, அப்போதெல்லாம் அதனை திறம்பட பாதுகாத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான்.

- ❖ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் சுயதொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் நிறுவப்பட்டது.
- ❖ பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்க நிரந்தரமாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 15.3.1993 முதல் ஓய்வு பெற்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.
- ❖ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் 1,343 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் 84,814 மாணாக்கர்கள் தங்கி பயில்கின்றனர்.

- விடுதிகளில் தங்கி பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எளிதில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், 2 கோடியே 51 லட்சம் ரூபாய் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
- 2018–19 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகளில் பங்கேற்று, வெற்றி பெறும் வகையில் புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.
- கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் 437 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 லட்சத்து 78 ஆயிரத்து 790 மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற எண்ணற்ற நலத் திட்டங்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்காக மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த பல வள்ளல்கள் உயிலாக எழுதி வைத்த அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக அரசு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியுள்ளது.
இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 79 வன்னியர் பொதுச் சொத்துக்கள் மற்றும் அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் அறச் செயல் நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மீதமுள்ள சொத்துக்களை கண்டறியவும், கண்டறியப்பட்ட சொத்துக்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்க வேண்டும் என்ற முறையீடுகள் எனக்கு பல வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த அமைப்புகளிடமிருந்து வந்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மேற்படி கொடையாக வந்த சொத்துக்களை பாதுகாத்து, வன்னிய மக்களின் மேம்பாட்டிற்காக அதனை முறையாக பயன்படுத்துவதற்கென தனியாக ஒரு சட்ட முன்வடிவினை சட்டமன்றத்தில் நிறைவேற்றி மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. இச்சட்டம் விரைவில் நடைமுறைக்கு வந்துவிடும். இந்த சட்டத்தினை அமல்படுத்த ஏதுவாக ஒரு நிர்வாக குழுமத்தை உருவாக்கி, அதன் மூலம் மேற்படி கொடையாளர்களின் எண்ணங்கள் ஈடேறும் வகையில், வன்னியகுல க்ஷத்திரிய ஏழை, எளிய மக்களின் கல்வி மற்றும் பல்வேறு வகையிலான முன்னேற்றங்கள் உறுதி செய்யப்படும்.

எனவே, வன்னியர்குல மக்களின் நலனில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அதிகம் அக்கறை கொண்டு இருக்கிறது என்பதையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், பின்னர் மாண்புமிகு அம்மாவின் அரசும் தான் வன்னியர் குல மக்களின் நலனுக்கு தொடர்ந்து

செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதை இந்த தருணத்தில் நான் நினைக்கின்றேன்.

ஏனென்றால், வன்னியர்களுக்காக கட்சி நடத்துவதாக கூறிக் கொள்பவர்கள் கூட, வன்னியர்களின் இந்த சொத்து பாதுகாப்பு சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு அம்மாவின் அரசு திறமையாகவும், வலுவாகவும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு பொறுத்துக் கொள்ளாத சிலர், இந்த அரசின் மீது களங்கம் ஏற்படுத்துவதற்கும், அரசியல் லாபம் தேடுவதற்கும், விளம்பரம் தேடுவதற்காகவும், இந்த அரசைப் பற்றி விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசு இதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் '**எனது கடன் மக்கள் பணி செய்து கிடப்பதே**' என்று மாநிலத்தின் கட்டமைப்பை வலுவாக்கும் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்துவதற்கான மக்களுக்கான பணிகளை ஆற்றி வருகிறது.

இதனை கூறும்போது, எனக்கு
ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாக சென்று கொண்டிருந்தது. அதன் ஒரே லட்சியம்,

**போகும் பாதையில் இருக்கும் அனைத்து வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்;**
**அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்க வேண்டும்;**
**மக்கள் வயிறார உண்டு பசியாற வேண்டும்;**
**எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அத்தனை பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்;**
**எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ**
**அவ்வளவு விரைவில் செய்திட வேண்டும்** – என்பதுதான்.

திடீரென்று வீசிய பலத்த காற்றினால்,

கரையோரம் வசித்து வந்த ஒரு தவளை

அந்த ஆற்றில் விழுந்து விட்டது.

அந்தத் தவளை சிறிதாக இருந்தாலும்,

அதற்கு ஆணவமும், வாயாடித்தனமும் அதிகம்.

தன்னை தள்ளி ஆற்றில் போட்ட, அந்தக் காற்றிடம் தவளை சொன்னது,

“இதோ பார் இந்த ஆற்றை ஓடவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில் பார் இந்த ஆற்றை ஓடவிடாமல் செய்து விடப் போகிறேன். ஆறு என்னிடம் கெஞ்சப் போகிறது. நான் அதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன்.

ஓர் அங்குலம் கூட நகர முடியாமல் நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்'' என்றது.

காற்று கைக்கொட்டி சிரித்தது. ''என்ன சிரிக்கிறாய் **?**'' என்று ஆத்திரத்துடன் கேட்டது அந்தத் தவளை. தவளையின் ஆணவப் பேச்சிற்கு காற்று பதில் சொல்ல விரும்பவில்லை. அது தன்போக்கிலேயே சென்று கொண்டிருந்தது. தவளைக்கு இன்னும் ஆணவம் தலைக்கேறி, ''காற்றே நான் நினைத்தால் உன்னையும் நிறுத்தி விடுவேன்'' என்று கொக்கரித்தது.

அதே நேரம் ஆற்றில் ஒரு சுழல் ஏற்பட்டது. அந்த ஆணவத் தவளை அந்த சுழலில் அகப்பட்டுக் கொண்டு, படாதபாடு பட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்து விட்டது. அந்த தவளை எங்கே போனது என்றே தெரியவில்லை. ஆறோ தன்போக்கில் அமைதியாக ஓடி தான் செல்லும் பாதையெல்லாம் வளமாக்கிக் கொண்டிருந்தது.

இந்த கதையில் வரும் ஆறு என்பது

மாண்புமிகு அம்மாவின் அரசு.

ஆணவத் தவளை யார் என்று

நான் உங்களுக்கு அடையாளம் காட்டத் தேவையில்லை.

உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும்.

இது போன்ற ஆயிரம் தவளைகள் வந்தாலும்

எங்களின் வேகத்தையோ, ஓட்டத்தையோ
தடை செய்ய முடியாது, கட்டுப்படுத்தவும் முடியாது.
தடைகள் அத்தனையும் உடைத்தெறிந்து,
நாங்கள் ஆறு போல் வளத்தைக் கொடுத்து,
மக்கள் பணி ஆற்றிக் கொண்டிருப்போம்.

இறுதியாக இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜிஆரும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும் வன்னியர்குல மக்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி, தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக்க தொடர்ந்து செயல்படும் என்பதை ஆணித்தரமாக இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவில் பேசிய வன்னியர்குல இனத் தலைவர்கள் பல்வேறு கோரிக்கைகளை மேடையில் வைத்தார்கள். அதையெல்லாம் கவனமுடன் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, எனக்கு முன்னாலே பேசியவர்கள் எடப்பாடி சட்டமன்றத்தைப் பற்றிக்

குறிப்பிட்டார்கள். எடப்பாடி சட்டமன்றத்திலே, அங்கிருக்கிற வன்னியர் இன மக்கள் எனக்கு அரசியல் அடையாளம் காட்டியவர்கள், அந்த மக்கள் நான் செல்கின்றபொழுதெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைப்பார்கள். எங்களுக்கு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தேன், பாலிடெக்னிக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தோம். அதுபோல, அங்கே தொழில்வளம் மிக்க பகுதியாக இருக்க வேண்டுமென்று கேட்டார்கள், அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதேபோல, மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை, பால் சொசைட்டி, எண்ணற்ற திட்டங்களை கேட்டார்கள். அதையெல்லாம் ஒவ்வொன்றாக, படிப்படியாக அம்மா இருக்கின்றபொழுதே அவர்களுக்கு வாங்கித் தந்திருக்கின்றேன். இப்பொழுதும் தந்து கொண்டு இருக்கின்றேன். அந்த மக்கள் என்றென்றைக்கும் என் இதயத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, அந்த மக்களால் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, இங்கே ஒரு அறிவிப்பை வெளியிட நான் விரும்புகின்றேன். நீங்கள்

மகிழ்ச்சியோடு கேட்பீர்கள் என்று கருதுகின்றேன். தேசப்பற்று கொண்டு மக்களுக்காக உழைத்து மறைந்த பெருந்தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு பெருமையும் புகழும் சேர்க்கும்விதமாக, சட்டமன்றப் பேரவையில், அவருடைய முழு உருவப்படம் வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து,

இங்கே மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்தப் பாராட்டு விழாவை நடத்திய அகில இந்திய வன்னியர்குல சத்திரிய சங்கத்தினுடைய பேரவையினுடைய குழு அத்தனைபேருக்கும், முன்னின்று நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், வருகைதந்த வன்னியர்குல சகோதர, சகோதரிகளுக்கும், அவர்களுடைய எண்ணங்கள் ஈடேற அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்று தெரிவித்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**